**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-3 | Date | : 30.07.2025 |
| Case No. | : **O.S.166/2019** | Nationality | : Indian |
| Name | : ராமகிருஷ்ணன் | Religion | : |
| Father's/Husband's Name | : ராஜாங்கம் | Age | : 65 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.3</u>

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சத்திய பிரமாணத்தின் பேரில் சாட்சியம் அளிக்க உள்ளதால் நான் கொடுக்கும் சாட்சியம் பொய்யாக இருக்கும் பட்சத்தில் என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். வாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் திருவிடைமருதூரில் உள்ள விவசாய கிடங்கிற்கு இடுபொருள் வாங்க வந்து செல்லும் வகையில் கடந்த 20 ஆண்டு காலமாக பழக்கம். வாதி என்ன பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதிக்கு சொந்தமான சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்போ அல்லது பிரவேசிக்கவோ கூடாது என பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். எந்தெந்த சொத்துக்களுக்கு வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் புல எண்கள். 130/ 45, 130/46, 130/16, 130/17 ஆகிய சொத்துக்களுக்கு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி புல எண்களுக்கு உண்டான கிரய ஆவணங்களை வாதி தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணங்கள் எந்தெந்த ஆவணங்கள் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த ஆவணங்கள் குறித்த

விவரங்கள் தெரியுமா என்றால் பார்த்தால் என்னால் சொல்ல முடியும். மேற்படி சொத்துக்களில் வாதி ஜெயராமன்தான் அனுபவத்தில் உள்ளார். மேற்படி புல எண்கள் 130/16 மற்றும் 130/17 ல் பாதை பிரச்சனை உள்ளது. மற்ற இரண்டு சொத்துக்களிலும் பிரச்சனை இல்லையா என்றால் அது ஞாபகமில்லை. 1937 ல் உருவாக்கப்பட்ட ஆவணத்தில் மேற்கண்ட 4 புல எண்களுக்குண்டான சொத்துக்களும் அடங்கியுள்ளது என்றால் 130/17 சொத்துக்கள் மட்டும் உள்ளது. புல எண் 130/16 மேற்கண்ட 1937 ம் ஆண்டு ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் புல எண் 130/16 பின்னிட்டு உட்பிரிவு ஆனதாக சொல்வது குறித்தும் அது கமலாதேவியின் வசம் இருந்ததாக சொல்வது குறித்தும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 130/16 சொத்தானது கமலாதேவியிடமிருந்து வாதி ஜெயராமனுக்கும், அவரது மகன் வெங்கடேசனுக்கும் கிடைத்துள்ளது. மேற்படி 130/16 சொத்தானது கமலா தேவிக்கு எவ்வாறு வந்தடைந்தது என்றால் வாதி ஜெயராமனின் தம்பி குணசேகரன் இறந்த பின்பு அவரது மனைவியான கமலா தேவிக்கு வந்தடைந்தது. 130/16 சொத்தை உட்பிரிவு செய்ததற்கான ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 130/16 சொத்தானது கமலாதேவியின் கணவர் குணசேகரனுக்கு சொந்தமானதல்ல என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 3 ம் பத்தியில் தாவா சொத்துக்கள் வாதி ஜெயராமனின் பூர்வீக சொத்து என கூறியுள்ள சங்கதி எனக்கு வாதி சொல்லிதான் தெரியும் என்றால் 1937 ஆவணத்தின்படி சொன்னேன். வாதி கொல்லை புறத்தில் பயன்பாட்டிற்காக கழிவறை கட்டியுள்ளதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் அது எந்த ஆண்டு யாரால் கட்டப்பட்டது என்றால் வாதி ஜெயராமன் கட்டியது ஆண்டு ஞாபகத்தில் இல்லை. தற்போது அந்த இடத்தில் 2 கழிவறைகள் உள்ளது. மேற்படி கழிவறைகள் யார் வீட்டிற்கு பின்னால் உள்ளது என்றால்

வாதி ஜெயராமன் வீட்டிற்கு பின்னால் உள்ளது. வாதியின் வீடு ஓட்டு வீடாக உள்ளது. பிரதிவாதியின் வீடு தகர ஷீட்டால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் கழிவறைகளை தவித்து வேறு என்ன உள்ளது என்றால் வைக்கோல்போர், எருக்குழி, மாட்டு கொட்டகை உள்ளது. மேற்படி வைக்கோல்போர், எருக்குழி, மாட்டு கொட்டகை யாருக்கு சொந்தமானது என்றால் வாதி ஜெயராமனுக்கு சொந்தமானது. மேற்படி கழிவறைகள் வாதி சொந்த பணத்தில் கட்டியதா அல்லது அரசு மானியம் பெற்று கட்டியதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி அழகரை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். அழகரின் அம்மாவை எனக்கு தெரியாது. அழகரின் அம்மா சுப்புலெட்சுமி என்பவரின் பெயரில்தான் மத்திய அரசின் மானியம் பெற்று 2 கழிவறைகளும் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் சந்து பகுதியை விட்டு விட்டு வாதி வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வீட்டை வாதிதான் கட்டினார் என்றால் சரிதான். அந்த வீட்டின் வயது என்ன இருக்கும் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வீட்டை நான் சொல்வதுபோல் வாதி கட்டவில்லை என்றாலும் வாதியின் தகப்பனார் கட்டினார் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் முழு விவரமும் எனக்கு தெரியும் என்றால் ஞாபகமில்லை. தாவா வழக்கு சொத்தில் 130/16 ல் சரிபாதி சொத்திற்கு கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.200/2024 என்ற வழக்கை பிரதிவாதியின் தாயார் சுப்புலெட்சுமி தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி மேற்படி வழக்கு குறித்து எனக்கு தெரிவித்தாரா என்றால் தெரிவிக்கவில்லை. வாதி ஜெயராமனின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சாமிநாதன். பிரதிவாதியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 130/16 சொத்தை பொறுத்து யு.டி.ஆர் பட்டா வழங்கும்போது பெயர் குழப்பத்தின் காரணமாக வாதியின் தந்தை பெயரும், பிரதிவாதிகளின் தந்தை பெயரும் சாமிநாதன் என்பதால் 1ம் வாதி ஜெயராமன் மற்றும்

அவரது தம்பி குணசேகரன் ஆகியோர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அது குறித்த விவரம் எனக்கு தெரியாது. யு.டி.ஆரில் வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில்தான் 2 ம் வாதி கமலாதேவிக்கு சொத்து மாற்றம் செய்யப்பட்டு பின்னிட்டு வாதியின் மகன் வெங்கடேசனுக்கு தற்போது கிரயம் மூலமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி ஜெயராமன் எனக்கு நண்பர் என்பதால் பெயர் குழப்பத்தினால் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதின் அடிப்படையில் தாவா சொத்தின் 1 இன சொத்தான 130/16 ல் சரிபாதி பிரதிவாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் நாளது தேதி வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 4 புல எண்களில் 130/16 ஐ 2016 ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயம் நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். தாவா சொத்திற்கு அக்கம்பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு அக்கம்பக்கம் வீடுகளிலுள்ளவர்களை தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பாட்டன் காலத்தில் இருந்தே 130/16 ல் உள்ள சொத்துக்களில் சரிபாதி சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 130 ல் இருந்த சொத்துக்களை உட்பிரிவு செய்யும்போது மற்ற குடியிருப்பு வாசிகளின் வீட்டிற்கு பின்புறம் உள்ள சொத்துக்களை அனுபவத்தின்பேரில் அவர்களுக்கே பட்டா வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 130/16 ல் உள்ள சொத்துக்கள் பட்டா மாற்றத்திற்கு முன்பு வரை நரசிம்ம ஐயர், மகாலிங்க ஐயர், சாமிநாத ஐயர் பெயரில்தான் இருந்தது என்றால் தெரியாது. பெயர் குழப்பத்தின் காரணமாக பட்டா வழங்கப்பட்டதின் அடிப்படையில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் இன்றளவும் புல எண் 130/16 ல் பகுதி சொத்தை பிரதிவாதிகள் அனுபவத்திது வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. மற்ற இன சொத்துக்களை

பொறுத்து பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் எனக்கு தெரியாது.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- J. Jayganesh,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.(FAC)